**செய்தி வெளியீடு எண்: 492** **நாள்: 26.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 25.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் 2 கோடியே 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், தொழில்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், பல்வேறு காரணங்களினால் உயர்கல்வியினைத் தொடர இயலாத மாணவ, மாணவிகள், தொழிற் பயிற்சி பெற்று அதன் மூலம் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institutes) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் 2 கோடியே 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்தப் புதிய தொழிற்பயிற்சி நிலையத்தில், ஐந்து தொழிற் பிரிவுகளில் பயிலும் 200 மாணவ, மாணவிகள் தொழிற்பயிற்சி பெற ஏதுவாக அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன், இந்த தொழிற் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திருமதி பி. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**